பினாங்கு மாநில அரசு மற்றும் முதல் அமைச்சர் லிம் குவான் எங்கின் 2017 தீபாவளி வாழ்த்துச்செய்தி.
27-10-2016

<u>பொருளாதார மேம்பாட்டுக்கு மலேசியர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் , 52 பில்லியன் (5200 கோடி) 1எம்டி பி மற்றும் 4.2 பில்லியன் (420 கோடி) நன்கொடை இழப்புகளின் வழியும் ஜி எஸ் டி வரியின் மூலமும் மூழ்கடிக்கப்பட்டுவிட்டது.</u>

பினாங்கு மாநில அரசு எல்லா இந்துக்களுக்கும் இன்பத் தீபாவளி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. துரதிஷ்டவசமாக இத்தீபாவளியின் இன்பக் குதூகலம். டோல் முதல் மற்ற பொருள்களின் விலை ஏற்றத்தைப்போல் சமையல் எண்ணெய்க்கான உதவித்தொகை குறைக்கப்பட்டதால், எண்ணெய்க்கு ஏற்பட்டுத் தடுப்பாடால் அதன் விலையும் ஏறிவிட்டதால் மகிழ்ச்சி குதூகலத்திற்கும் குந்தகம் ஏற்பட்டு விட்டது.

மலேசியர்களுக்குப் பொருளாதார மேம்பாட்டுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் , 52 பில்லியன் (5200 கோடி) 1எம்டி பி மற்றும் 4.2 பில்லியன் (420 கோடி) நன்கொடை முறைகேடுகள் வழியும் ஜிஎஸ்டி வரியின் மூலமும் மூழ்கடிக்கப் பட்டுவிட்டது. ஆனால் மக்களுக்கு எதிரான இந்த மாபெரும் துரோகங்கள் இனச் சமயத் தீவிரவாதங்களுடன் பினாங்கு மாநில அரசுக்கு எதிராகப் பரப்ப படும் பொருளாதார அவதூறு செய்திகளைக் கொண்டும் மறைக்கப் படுகிறது.

முதலில் முதலீடுகள் மாநிலத்தைவிட்டு வெளியேறி வருகின்றது என்பது சுத்தப் பொய். உண்மையில் ஆண்டு 2000 முதல் 2007ம் ஆண்டு வறைக்குமான 8 ஆண்டுகளை 2008ம் ஆண்டு முதல் 2015 ம் ஆண்டுவரைக்குமான 8 ஆண்டுகளுடன் ஒப்பிட்டால் அதன் உண்மை நிலை புரியும்.

2008ம் ஆண்டு முதல் 2015 ம் ஆண்டு வறைக்குமான 8 ஆண்டு காலத்தில் தொழில்துறை முதலீடுகள் 54.9 பில்லியன் (5900 கோடி) வெள்ளியும், வேலை வாய்ப்புகள் 17 விழுக்காடு உயர்ந்து, அதாவது 128,317 வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் வேலையில்லாதோர் எண்ணிக்கை இங்கேயே மிகக் குறைவு வெறும் 1.6 விழுக்காடு மட்டுமே. அதே வேளையில் 20 ஆயிரம் தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறையும் இங்கு ஏற்பட்டுள்ளது.

## CHANGE IN GDP PER CAPITA BY STATE

| Rank | STATE | 2006 | 2007 | 2006-2007 % change | 2006-2007 RM Increase |
|---|---|---|---|---|---|
| 1 | Sabah | 12,138 | 14,104 | 16.20% | 1,966 |
| 2 | Kelantan | 6,752 | 7,662 | 13.50% | 910 |
| 3 | Kedah | 10,821 | 12,160 | 12.40% | 1,339 |
| 4 | Perak | 13,233 | 14,832 | 12.10% | 1,599 |
| 5 | Pahang | 18,108 | 20,160 | 11.30% | 2,052 |
| 6 | Sarawak | 27,782 | 30,790 | 10.80% | 3,008 |
| 7 | Johor | 16,996 | 18,753 | 10.30% | 1,757 |
| 8 | Terengganu | 17,692 | 19,476 | 10.10% | 1,784 |
| 9 | WP Kuala Lumpur | 45,519 | 49,687 | 9.20% | 4,168 |
| 10 | Negeri Sembilan | 22,796 | 24,605 | 7.90% | 1,809 |
| 11 | WP Labuan | 31,281 | 33,687 | 7.70% | 2,406 |
| 12 | Selangor | 24,571 | 26,359 | 7.30% | 1,788 |
| 13 | Perlis | 13,555 | 14,500 | 7.00% | 945 |
| 14 | Melaka | 22,065 | 23,415 | 6.10% | 1,350 |
| 15 | Pulau Pinang | 29,624 | 31,381 | 5.90% | 1,757 |

| Rank | STATE | 2014 | 2015 | 2014-2015 |  |
|---|---|---|---|---|---|
|  |  |  |  | % change | RM Increase |
| 1 | Pulau Pinang | 42,130 | 44,847 | 6.40% | 2,717 |
| 2 | WP Labuan | 55,566 | 58,577 | 5.40% | 3,011 |
| 3 | Kedah | 17,329 | 18,249 | 5.30% | 920 |
| 4 | Perak | 24,132 | 25,418 | 5.30% | 1,286 |
| 5 | Johor | 28,089 | 29,539 | 5.20% | 1,450 |
| 6 | Selangor | 40,536 | 42,611 | 5.10% | 2,075 |
| 7 | WP Kuala Lumpur | 90,464 | 94,722 | 4.70% | 4,258 |
| 8 | Pahang | 29,341 | 30,343 | 3.40% | 1,002 |
| 9 | Melaka | 38,656 | 39,853 | 3.10% | 1,197 |
| 10 | Kelantan | 11,748 | 12,075 | 2.80% | 327 |
| 11 | Negeri Sembilan | 35,865 | 36,699 | 2.30% | 834 |
| 12 | Perlis | 20,999 | 21,394 | 1.90% | 395 |
| 13 | Terengganu | 26,397 | 26,529 | 0.50% | 132 |
| 14 | Sabah | 19,723 | 19,734 | 0.10% | 11 |
| 15 | Sarawak | 44,596 | 44,012 | -1.30% | -584 |

Source: Department of Statistics and Penang Institute’s calculations.

ஆண்டு 2000 முதல் 2007ம் ஆண்டு வறைக்குமான 8 ஆண்டுகளைக் காலத்தில் தொழில்துறை முதலீடுகளாக வெறும் 128.317 பில்லியன்களையும் 106,583 வேலை வாய்ப்புகளையுமே உருவாக்கியது.

பினாங்கு அனைத்துலக விமான நிலையத்தின் வழி கடந்த 4 ஆண்டுகளாகப் பயணித்தவர்களின் எண்ணிக்கையும் 6.5 மில்லியனாக (65 லட்சத்தை) கடந்து விட்டது. அதாவது 2020 இலக்கை 4 ஆண்டுகளுக்கு முன்பே எட்டியுள்ளது. இதுவே நமது வெற்றியின் பிரதிபலிப்பாகும். 2015 ம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தியில் நாம் முதல் இடத்தைப் பிடித்துள்ளோம்.

**Ranking of the growth rate of GDP per capita by states in Malaysia (current prices)**

| | 2005-2015 (%) | | 2006-2015 (%) | | 2007-2015 (%) | | 2008-2015 (%) | | 2009-2015 (%) | | 2010-2015 (%) | | 2011-2015 (%) | | 2012-2015 (%) | | 2013-2015 (%) | | 2014-2015 (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | WP Kuala Lumpur | 123.3 | WP Kuala Lumpur | 108.1 | WP Kuala Lumpur | 90.6 | WP Labuan | 88.3 | WP Labuan | 87.7 | WP Labuan | 52.4 | WP Kuala Lumpur | 34.0 | WP Kuala Lumpur | 22.9 | Pulau Pinang | 16.5 | Pulau Pinang | 6.4 |
| 2 | WP Labuan | 120.6 | Perak | 92.1 | WP Labuan | 73.9 | WP Kuala Lumpur | 68.7 | WP Kuala Lumpur | 66.1 | WP Kuala Lumpur | 46.4 | WP Labuan | 33.0 | Pulau Pinang | 21.0 | WP Kuala Lumpur | 15.2 | WP Labuan | 5.4 |
| 3 | Perak | 106.3 | WP Labuan | 87.3 | Perak | 71.4 | Melaka | 54.0 | Perak | 60.8 | Perak | 39.6 | Pulau Pinang | 26.2 | WP Labuan | 19.2 | Perak | 13.2 | Perak | 5.3 |
| 4 | Kelantan | 98.8 | Melaka | 80.6 | Melaka | 70.2 | Perak | 53.6 | Melaka | 56.9 | Melaka | 35.7 | Perak | 24.8 | Perak | 17.1 | Johor | 12.3 | Kedah | 5.3 |
| 5 | Melaka | 95.3 | Kelantan | 78.8 | Selangor | 61.7 | Johor | 46.5 | Johor | 56.5 | Johor | 34.1 | Selangor | 23.6 | Johor | 16.1 | Selangor | 11.9 | Johor | 5.2 |
| 6 | Kedah | 86.0 | Johor | 73.8 | Kelantan | 57.6 | Selangor | 45.6 | Selangor | 49.7 | Pulau Pinang | 33.5 | Melaka | 22.9 | Selangor | 15.8 | Melaka | 11.6 | Selangor | 5.1 |
| 7 | Pahang | 83.5 | Selangor | 73.4 | Johor | 57.5 | Kelantan | 40.9 | Pulau Pinang | 49.0 | Selangor | 31.9 | Johor | 21.3 | Melaka | 14.0 | Kedah | 9.8 | WP Kuala Lumpur | 4.7 |
| 8 | Selangor | 81.4 | Kedah | 68.6 | Pahang | 50.5 | Kedah | 40.1 | Pahang | 47.7 | Kedah | 30.0 | Kedah | 17.3 | Kedah | 13.4 | WP Labuan | 9.3 | Pahang | 3.4 |
| 9 | Johor | 81.2 | Pahang | 67.6 | Kedah | 50.1 | Perlis | 36.2 | Kedah | 46.2 | Pahang | 27.0 | Perlis | 16.9 | Terengganu | 10.8 | Pahang | 8.9 | Melaka | 3.1 |
| 10 | Sabah | 77.2 | Sabah | 62.6 | Negeri Sembilan | 49.2 | Negeri Sembilan | 36.2 | Kelantan | 43.4 | Sarawak | 25.6 | Negeri Sembilan | 14.2 | Pahang | 10.7 | Terengganu | 8.5 | Kelantan | 2.8 |
| 11 | Negeri Sembilan | 76.7 | Negeri Sembilan | 61.0 | Perlis | 47.5 | Pahang | 35.8 | Negeri Sembilan | 43.4 | Negeri Sembilan | 25.0 | Terengganu | 13.9 | Perlis | 9.5 | Negeri Sembilan | 7.6 | Negeri Sembilan | 2.3 |
| 12 | Sarawak | 74.0 | Sarawak | 58.4 | Sarawak | 42.9 | Pulau Pinang | 33.1 | Perlis | 40.9 | Kelantan | 23.1 | Pahang | 12.1 | Negeri Sembilan | 8.7 | Kelantan | 7.0 | Perlis | 1.9 |
| 13 | Perlis | 67.7 | Perlis | 57.8 | Pulau Pinang | 42.9 | Terengganu | 26.4 | Sarawak | 40.7 | Terengganu | 23.0 | Kelantan | 10.8 | Kelantan | 7.6 | Perlis | 5.9 | Terengganu | 0.5 |
| 14 | Terengganu | 67.2 | Pulau Pinang | 51.4 | Sabah | 39.9 | Sarawak | 18.6 | Terengganu | 38.9 | Perlis | 22.9 | Sarawak | 8.3 | Sarawak | 6.1 | Sabah | 5.6 | Sabah | 0.1 |
| 15 | Pulau Pinang | 67.1 | Terengganu | 49.9 | Terengganu | 36.2 | Sabah | 12.6 | Sabah | 27.2 | Sabah | 10.7 | Sabah | 0.4 | Sabah | 1.3 | Sarawak | 5.4 | Sarawak | -1.3 |

Source: Penang Institute's calculations based on the latest GDP data published by Department of Statistics Malaysia.

உண்மை, புள்ளி விவகாரத்துறையும், அதன் அறிக்கையில் 2007ம் ஆண்டில் பினாங்கு மொத்தத் தேசிய உற்பத்தியில் ஆக கடைசி இடத்தில் இருந்ததையே காட்டுகிறது. ஆனால் நமது கடுமையான 8 ஆண்டுகால உழைப்பின் பயனாக நாம் மொத்தத் தேசிய உற்பத்தியில் முதல் இடத்தைப் பிடித்துள்ளோம். நாமே வெற்றியாளர்கள்.!

பினாங்கு மீண்டும் அதன் பொருளாதார உச்சத்தை எட்டிப்பிடிக்க நீண்ட (8 ஆண்டுகளை) எடுத்துக்கொண்டது. ஆனால் இது எதிர்பார்த்தே ஒரு முறை ஆகக் கீழே இரங்கி விட்டால், அவ்வளவு எளிதில் மீண்டும் உச்சத்தை எட்டிப்பிடிக்க முடியாது.

நமது இலக்கு பினாங்கைச் சர்வதேச "விவேக" நகராக உருவாக்குவது. இதற்கான பணி திறமையான, தூய்மையான தலைத்துவத்தின் வழி 2007 ம் ஆண்டு தொடங்கி விட்டது. இம்மாநிலத்தைக் கவர்ச்சிகரமான சர்வதேச முதலீட்டு, சுற்று பயண, குடியிருப்பு மையமாக்கும் சூழ்நிலைகளை உருவாக்கப் பாடுபட்டு வருகிறோம்..

பினாங்கின் பட்ஜெட்டுக்குப் பின், உபரி நிதி கையிருப்பு 2008ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வறைக்குமான 8 ஆண்டுகாலத்தில் 574 மில்லியனை எட்டியுள்ளது. அது 1957 முதல் 2007 வறைக்குமான 50 ஆண்டுகாலப் பாரிசான் ஆட்சிக்காலத்தில் 373 மில்லியனாக மட்டுமே இருந்தது.

பினாங்கின் சொத்து கையிருப்பு கடந்த எட்டே ஆண்டுகளில் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது , அதாவது 850 (85 கோடியிலிருந்து) மில்லியனிலிருந்து 1.6 பில்லியனாக (160 கோடியாக) உயர்ந்துள்ளது.

இதே காலகட்டத்தில் பினாங்கு மாநிலக் கடன் 90 விழுக்காடு குறைக்கப்பட்டு அதாவது (1680 கோடியிலிருந்து) 2015 ம் ஆண்டின் முடிவில் 69 மில்லியனாக (6.9 கோடியாக) குறைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் சுற்றுப்பயணிகள் , தொழில் துறைகளின் வளர்ச்சி சாலைப் போக்குவரத்தில் கடும் நெரிசலை ஏற்படுத்தியுள்ளது. அதனைச் சரி செய்யச் சாலை, ரயில் , ஆகாய மற்றும் கடல் வழி பயணத் தடங்களை ஒன்றிணைக்கும் ஒரு பெரும் 27பில்லியன் (2700 கோடி) திட்ட வரைவு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நாடும் மாநிலமும் கடும் பொருளாதாரச் சரிவை எதிர் நோக்கியுள்ள வேளையில் ஜி.எஸ்டி மற்றும் ரிங்கிட்டின் மதிப்பு வீழ்ச்சி என்று அனைத்தும் படும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசு அறிவித்த 2017 ம் ஆண்டுக்கான பட்ஜெட்டும் இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள எந்த வழிமுறையையும் வழங்கவில்லை. அதனால் பினாங்கு மாநில சாலை, ரயில் , ஆகாய மற்றும் கடல் வழி பயணத் தடங்களை ஒன்றிணைக்கும் ஒரு பெரும் 27 பில்லியன் (2700 கோடி) திட்ட வரைவுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கினால், அது பொருளாதார மறுமலர்ச்சிக்கு வித்திட வேண்டும்.

லிம் குவான் எங்.